FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8348079

1. District : கிருஷ்ணகிரி PS: ஊ.து.கு.பிரிவு Year: 2026 FIR No.: 2/IC/ Date: 04/06/2026
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முத.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: ஊழல் தடுப்புச் சட்டம் 1988 Sections பிரிவுகள்: 7(a) 4
(ii) Act சட்டம்: ஊழல் தடுப்பு திருத்தச் Sections பிரிவுகள்: 7(a) r/w 12
(iii) Act சட்டம்: சட்டம் 2018 Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : Date to :
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை 04/06/2026
Time Period : Time from : Time to : சுமார் 13.30 மணிக்கு முன்பு
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : 04/06/2026 Time : 21.00 மணி
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம் 22.00 மணி

4. Type of Information : Written/ Oral / Electronic form : தன்னிச்சையாக
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: சுமார் 25 கி.மீ மேற்கு
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : (b) Address : சார்பதிவாளர் அலுவலகம்
முறைக் காவல் எண் – முகவரி சூளகிரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : – District : –
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : S. நவி (b) Father's/ Husband's Name :
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர் S. சதாசிவம்
(c) Date / Year of Birth : 19.05.1972 (d) Nationality : (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் இந்தியன் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : காவலர் (g) Address : ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு
தொழில் அயல்வாளர் முகவரி கிருஷ்ணகிரி.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1. திரு. J. அன்பழகன், சார்பதிவாளர் (பொ) சூளகிரி
2. திரு. S. சிக்கப்பா, S/o சிக்கப்பா, 11ST, ராயக்கோட்டை, மேலபுதூர், ஆதூர்
3. திரு. R. அஜித் S/o ராமசாமி, 2/213/3, பிரேயபானையம் கிராமம், சூளகிரி
4. திரு. R. நவின்குமார் S/o ராஜேந்திரன், 2/100, கிழ்தெரு, சூளகிரி.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

–

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

விபரம் தனித்தாள்களில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

04/6/2026

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
04/04/2026 at 22.45 hrs

Name: பெயர் S. ரவி
Rank: நிலை .....No. எண் .....
கானவீல் அரசுவானர்
ஸ.தக. பிரிவு
விருதுநகர்

கிருஷ்ணகிரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.2/AC/2026 u/s 7 (a) r/w 12 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி.

04.06.2026-ம் தேதி மதியம் சுமார் 13.00 மணியளவில் நான் அலுவலக பொறுப்பில் இருந்த போது கிருஷ்ணகிரி மாவட்டம் சூளகிரி சார் பதிவாளர் அலுவலகத்தில் பொறுப்பு சார் பதிவாளராக பணிபுரிந்து வரும் திரு.J.ஆசைதம்பி அவர்கள் அலுவல் நேரத்தில் அலுவலகத்தில் வைத்து ஆவண எழுத்தர்களிடமிருந்தும், இடைதரகர்களிடமிருந்தும் மற்றும் பத்திர பதிவு செய்யும் பொதுமக்களிடமிருந்தும் கையூட்டு பணம் பெற்று வருவதாக கிடைத்த இரகசிய தகவலின் பேரில் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கிருஷ்ணகிரி ஆகிய நான், அரசு சாட்சிகள் திருமதி.S.பத்மாவதி, தனித்துணை வட்டாட்சியர் (நி.எ), தனி மாவட்ட வருவாய் அலுவலர் அலுவலகம் (நி.எ), நெடுஞ்சாலைகள் துறை, கிருஷ்ணகிரி மற்றும் திரு.R.முருகேசன், முதுநிலை வருவாய் ஆய்வாளர், தனி மாவட்ட வருவாய் அலுவலர் அலுவலகம் (நி.எ), நெடுஞ்சாலைகள் துறை, கிருஷ்ணகிரி ஆகியோர் முன்னிலையில் 04.06.2026-ஆம் தேதி 15.30 மணி முதல் 19.45 மணி வரை மேற்படி சார் பதிவாளர் அலுவலகத்தில் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. அந்த திடீர் சோதனையின் போது அந்த அலுவலகத்தின் கிழக்கு நோக்கி இருந்த நுழைவாயிலின் வழியாக உள்ளே நுழைந்தபோது அங்கு வராண்டாவில் பத்திரபதிவு செய்யவந்து பொதுமக்கள் சிலர் அமர்ந்திருந்தனர். பின்னர் நான் மேற்படி அலுவலகத்தின் மத்திய அறையில் நுழைந்தபோது மேற்படி அறையின் தெற்கு சுவற்றில் தென்மேற்கு மூளையில் சார்பதிவாளர் என்று பொருத்தப்பட்டிருந்த பெயர் பலகைக்கு கீழே வடக்கு முகம் பார்த்தவாறு இருந்த இருக்கையில் ஒரு நபர் அமர்ந்திருந்தார். அவரைப் பற்றி விசாரிக்க, அவர் தனது பெயர் J.ஆசைதம்பி என்றும், தான் கெலமங்கலம் சார் பதிவாளர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருவதாகவும், தற்போது சூளகிரி பொறுப்பு சார்பதிவாளராக இருந்த திருமதி.இல.சுதா என்பவர் விடுப்பில் சென்றுள்ள காரணத்தினால், தான் இன்று ஒருநாள் மட்டும் பொறுப்பு சார் பதிவாளராக செயல்படுவதாகவும் தெரிவித்தார். அவரிடம் நான் என்னையும், என்னுடன் வந்த அரசு சாட்சிகள் மற்றும் காவலர் குழுவினரையும் அறிமுகம் செய்து வைத்து அவருடைய அலுவலகத்தை திடீர் தணிக்கை செய்ய வந்த விபரம் தெரிவிக்கப்பட்டது.

மேலும், அங்கு பத்திரப்பதிவிற்காக வந்திருந்த பொதுமக்களிடம் திடீர் தணிக்கை குறித்த விவரத்தினை கூறி அதற்கு ஒத்துழைப்பு அளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. பின்னர் அங்கு பணியிலிருந்த இதர பணியாளர்களை அவரவர் இருக்கையிலேயே அமர்ந்து பணிகளை கவனிக்குமாறு அறிவுறுத்தப்பட்டது. பின்பு அங்கிருந்த பொதுமக்களிடம் பத்திரப் பதிவு வேலை முடித்தவர்களை வராண்டாவின் ஒரு ஓரமாக வரச்செய்து அவர்கள் ஆஜர்படுத்திய மணிபர்ஸ் மற்றும் கைப்பைகள் ஆகியவற்றில் அரசு சாட்சிகள் முன்னிலையில் சோதனை மேற்கொள்ளப்பட்டது. அவற்றில் சந்தேகத்திற்கிடமான பணமோ, வேறு ஆவணங்களோ கண்டறியப்படாததால் சோதனை மேற்கொள்ளப்பட்ட பொதுமக்கள் அலுவலகத்திலிருந்து வெளியில் அனுப்பிவைக்கப்பட்டனர். பின்பு, அலுவலகத்தின் உள் வராண்டாவில் அமர்ந்திருந்த சில நபர்களை அழைத்து விசாரணை செய்ததில் திரு.T.முரளி, திருமதி.ரேணுகா மற்றும் திரு.V.சங்கர் ஆகியோர் சூளகிரி சார் பதிவாளர் அலுவலகத்தில் ஒப்பந்த பணியாளராக இருப்பதாகவும், திரு.V.R.சரவணன் என்பவர் அலுவலக உதவியாளராக பணிபுரிவதாகவும் தெரிவித்தனர். திரு.R.அஜித் மற்றும் திரு.R.நவீன்குமார் ஆகியோர் ஆவண எழுத்தர் அலுவலகத்தில் உதவியாளராக வேலை செய்வதாகவும், தங்களது வாடிக்கையாளருக்கு பத்திரப் பதிவு செய்ய உதவிக்கு உடன் வந்ததாகவும் தெரிவித்தனர். அதில் திரு.R.அஜித் என்பவரிடம் சோதனை செய்ததில் அவரிடம் பணம் ரூ.4010/- (500X8=4000, 10X1=10) இருந்தது. அதைப்பற்றி அஜித்திடம் விசாரிக்க, அவர் அந்த பணம் தனது சொந்த செலவிற்காக வைத்திருந்ததாக தெரிவித்தார். ஆனால் அவர் ஆவண எழுத்தர் அலுவலகத்தில் பணிபுரிந்து வருவதாலும் அவர் சார் பதிவக அலுவலர்களுக்கு கையூட்டாக கொடுக்க கொண்டுவரப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் மேல் விசாரணைக்காக இந்நடவடிக்கையின்போது என்னால் கைபற்றப்பட்டது. அதேபோல் அங்கிருந்த மற்றொரு நபரான திரு.R.நவீன்குமார் என்பவரிடம் சோதனை செய்ததில் அவரிடம் பணம் ரூ.2000/- (500X4=2000) இருந்தது. அதைப்பற்றி காவல் ஆய்வாளர் அஜித்திடம் விசாரிக்க, அவர் அந்த பணம் தனது சொந்த செலவிற்காக வைத்திருந்ததாக தெரிவித்தார். ஆனால் அவர் ஆவண எழுத்தர் அலுவலகத்தில் பணிபுரிந்து வருவதாலும் அவர் சார் பதிவக அலுவலர்களுக்கு கையூட்டாக கொடுக்க கொண்டுவரப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் மேல் விசாரணைக்காக

இந்நடவடிக்கையின்போது என்னால் கைபற்றப்பட்டது. பின்னர் காவல் ஆய்வாளர் அவர்கள் மேற்படி அலுவலகத்தில் இருந்த திரு.சிக்கப்பா, என்ற தனி நபரிடம் விசாரிக்க, அவர் தான் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருவதாகவும், இன்று ஆல்சோனை கிராமத்தை சேர்ந்த திரு.கெம்பையா வகையாராக்களிடமிருந்து நிலத்தினை கிரையம் செய்யும் பொருட்டு ஆவணம் தயார் செய்துகொண்டு வந்ததாகவும் தெரிவித்தர். காவல் ஆய்வாளர் அவரை சோதனையிட்டதில், அவர் தனது பேண்ட்டின் முன்பக்க பாக்கெட்டிலிருந்து கத்தையாக 500 ரூபாய் நோட்டுகளை எடுத்து ஆஜர் செய்தார். அதனை அரசு சாட்சிகள் உதவியுடன் எண்ணிப்பார்க்க அதில் 500 ரூபாய் நோட்டுகள் 88 (500X88=44000) எண்ணிக்கையில் மொத்தம் ரூபாய் 44,000/- (ரூபாய் நாற்பத்தி நாண்காயிரம் மட்டும்) இருந்தது. அதுகுறித்து அவரிடம் கேட்க பத்திரப்பதிவு செய்தபின் தனக்கு நிலம் விற்பனை செய்தவர்களுக்கு செலுத்துவதற்காகவும், பத்திரப்பதிவு செலவுகளுக்காகவும் எடுத்து வந்ததாக தெரிவித்தார். ஆனால், அவரது கிரையப் பத்திரத்தினை ஆய்வு செய்ததில் மேற்படி பத்திரம் கிரையம் செய்ய அரசுக்கு செலுத்தவேண்டி பணம் இன்னும் செலுத்தப்படாமல் உள்ளது தெரியவந்தது. தனிநபரான திரு.சிக்கப்பா கூறிய விளக்கங்கள் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இல்லாததாலும், இப்பணம் சார் பதிவக அலுவலர்களுக்கு கையூட்டாக கொடுக்க கொண்டுவரப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் மேல் விசாரணைக்காக இந்நடவடிக்கையின்போது என்னால் கைபற்றப்பட்டது. பின்பு சார் பதிவாளர் இருக்கைக்கு முன்பு இருந்த மேசை முழுவதும் அரசு சாட்சிகள் முன்னிலையில் சோதனை மேற்கொண்டதில் வேறு பணமோ, சந்தேகத்திற்கிடமான ஆவணங்களோ ஏதும் கைப்பற்றப்படவில்லை. பின்னர் அரசு சாட்சிகள் மற்றும் பொறுப்பு சார் பதிவாளர் J.ஆசைத்தம்பி ஆகியோருடன் மேற்படி மத்திய அறையின் மேற்கு சுவரை ஒட்டி கிழக்கு முகம் பார்த்தவாறு இருந்த நுழைவாயிலின் வழியாக நுழைந்து மேற்படி அலுவலகத்தின் தென்மேற்கு மூளையில் அமைந்துள்ள பழைய பதிவறையின் நுழைவு வாயிலின் வலதுபுறத்தில் வெளீர் பச்சை நிற இரும்பு பிரோவும், வெளீர் கிரே நிற பிரோவும் இருந்தன. பொறுப்பு சார் பதிவாளர் மற்றும் அரசு சாட்சிகள் ஆகியோர் முன்னிலையில் காவல் குழுவினருடன் மேற்படி இரும்பு பிரோக்களை திறந்து சோதனை மேற்கொண்டதில் வேறு பணமோ, சந்தேகத்திற்கிடமான ஆவணங்களோ ஏதும் கைப்பற்றப்படவில்லை. பின்னர் மேற்படி இரும்பு பிரோக்களை நகர்த்தி சோதனை

மேற்கொண்டபோது, அங்கிருந்த வெளீர் கிரே நிற பிரோவிற்கு பின்புறத்தில் ஆவணப்பாதுகாப்பு உறை, பதிவுத்துறை என்று அச்சிடப்பட்ட அரசால் வழங்கப்பட்ட காக்கிநிற காகித கவர் ஒன்று சுருட்டப்பட்ட நிலையில் இருந்தது. அதனை அரசு சாட்சிகள் உதவியுடன் எடுத்து, திறந்து பார்க்க அதில் 500 ரூபாய் தாள்கள் இரண்டு கட்டுகளாக இருந்தன. அதனை அரசு சாட்சிகளின் உதவியுடன் எண்ணிப்பார்க்கையில், அதில் ஒரு கட்டில் 500 ரூபாய் நோட்டுகள் 100 எண்ணிக்கையில் இரண்டு கட்டிலும் மொத்தம் ரூபாய் 1,00,000/- (500X200=1,00,000) (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) இருந்தது. அந்த பணம் குறித்து பொறுப்பு சார் பதிவாளர் திரு.J.ஆசைத்தம்பி அவர்களிடம் விசாரணை செய்ததில் அப்பணம் அங்கு எவ்வாறு வந்தது என்று தனக்கு ஏதும் தெரியாது என தெரிவித்தார். மேலும் மேற்கண்ட தொகைக்கு எவரும் உரிமை கோரவில்லை. எனவே இப்பணம் சூளகிரி சார் பதிவக அலுவலர்களுக்கு கையூட்டாக கொடுக்கப்பட்ட பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் மேல் விசாரணைக்காக மேற்படி பணம் ஆவணப்பாதுகாப்பு உறை, பதிவுத்துறை என்று அச்சிடப்பட்ட அரசால் வழங்கப்பட்ட காக்கிநிற காகித கவருடன் சேர்த்துஇந்நடவடிக்கையின்போது சாட்சிகள் முன்னிலையில் என்னால் கைப்பற்றப்பட்டது. பின்னர் அலுவலகத்தின் தென்மேற்கு மூளையில் அமைந்துள்ள பழைய பதிவறையினை அரசு சாட்சிகள் மற்றும் பொறுப்பு சார் பதிவாளர் J.ஆசைத்தம்பி ஆகியோர் முன்னிலையில் சோதனை மேற்கொண்டதில் வழக்கு தொடர்பாக பணமோ, சந்தேகத்திற்கிடமான ஆவணங்களோ ஏதும் கைப்பற்றப்படவில்லை. பின்னர் மேற்படி அலுவலகத்தின் முதல் தளத்தில் அமைந்துள்ள பழைய பதிவேடுகள் வைத்திருக்கும் அறையினை அரசு சாட்சிகள் மற்றும் பொறுப்பு சார் பதிவாளர் J.ஆசைத்தம்பி ஆகியோர் முன்னிலையில் சோதனை மேற்கொண்டதில் வழக்கு தொடர்பாக பணமோ, சந்தேகத்திற்கிடமான ஆவணங்களோ ஏதும் கைப்பற்றப்படவில்லை. பொறுப்பு சார் பதிவாளர் திரு.J.ஆசைதம்பி அவர்களிடம் இந்த ஆண்டிற்கான கொடிநாள் நிதி இலக்கு ஏதேனும் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதா என்று காவல் ஆய்வாளர் கேட்க, அதற்கு அவர் அவ்வாறு தனக்கு இலக்கு ஏதும் நிலுவை இல்லை என்று தெரிவித்தார். மேலும் அரசுக் கணக்கில் உள்ள இருப்புத் தொகை பற்றி அவரிடம் கேட்க, தற்போது சார் பதிவாளர் அலுவலகங்களில் எந்த தொகை செலுத்த வேண்டுமானாலும் அதை இணையவழியில் மட்டுமே செலுத்தப்பட வேண்டும் என்றும் சார்பதிவாளர்

அலுவலகத்தில் நேரடியாக அரசு கணக்கில் செலுத்த வேண்டிய தொகைகள் எதுவும் வசூல் செய்யப்படுவதில்லை என்றும் தெரிவித்தார். இது சம்மந்தமாக 04.06.2026-ம் தேதியன்று 15.30 மணிக்கு தொடங்கி 19.45 மணி வரை ஒரு செயல்முறை நடவடிக்கையானது என்னால் தயார் செய்யப்பட்டது. அதன் நகல்களை பொறுப்பு சார் பதிவாளர் திரு.J.ஆசைதம்பி, ஆவண எழுத்தர்களிடம் உதவியாளர்களாக பணிபுரியும் திரு.R.அஜித் மற்றும் திரு.R.நவீன்குமார் மற்றும் தனிநபர் திரு.S.சிக்கப்பா ஆகியோருக்கு இலவசமாக வழங்கப்பட்டது. பிறகு கைப்பற்றப்பட்ட மொத்த பணம் ரூ.1,50,010/- உடன் கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு வந்து பொது ஊழியரான பொறுப்பு சார் பதிவாளர் திரு.J.ஆசைதம்பி அவர்கள் அலுவல் நேரத்தில் அலுவலகத்தில் வைத்து ஆவண எழுத்தர்களிடமிருந்தும், இடைதரகர்களிடமிருந்தும் மற்றும் பத்திர பதிவு செய்யும் பொதுமக்களிடமிருந்தும் கையூட்டு பணம் பெற்றுக்கொண்டதற்கான சரியான முகாந்திரம் இருப்பதாலும் மற்றும் ஆவண எழுத்தர்களிடம் உதவியாளர்களாக பணிபுரியும் திரு.R.அஜித் மற்றும் திரு.R.நவீன்குமார் மற்றும் தனிநபர் திரு.S.சிக்கப்பா ஆகியோர் பத்திரபதிவு செய்வதற்காக சார் பதிவாளருக்கு கையூட்டு கொடுக்கும் உள்நோக்கத்துடன் பணம் வைத்திருந்ததற்கான சரியான முகாந்திரம் இருப்பதாலும் இன்று 04.06.2026-ம் தேதி இரவு 22.00 மணிக்கு கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 02/AC/2026 u/s 7 (a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018-ன்படி சூளகிரி பொறுப்பு சார் பதிவாளர் திரு.J.ஆசைதம்பி என்பவர் மீதும், u/s 7 (a) r/w 12 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 -ன்படி ஆவண எழுத்தர்களிடம் உதவியாளர்களாக பணிபுரியும் திரு.R.அஜித் மற்றும் திரு.R.நவீன்குமார் மற்றும் தனிநபர் திரு.S.சிக்கப்பா ஆகியோர் மீதும் குற்ற வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையின் அசலை மாவட்ட முதன்மை நீதிபதி, கிருஷ்ணகிரி அவர்களுக்கும் மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பிவைத்தேன்.

04/06/2026
Inspector of police
Vigilance Krishnagiri Unit.